(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 95.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2016 ஆகஸ்ட் 26, வெள்ளிக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

158/ '15

1.

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான காடுகளில் பைனஸ், மற்றும் யூக்கலிப்டஸ் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணியின் அளவு வெவ்வேறாக எத்தனை ஏக்கர்கள் என்பதையும்;

(ii) இச்செய்கை காரணமாக சூழலுக்கு ஏற்படும் நன்மைகள் மற்றும் தீமைகள் யாவையென்பதையும்;

(iii) பைனஸ் மற்றும் யூக்கலிப்டஸ் செய்கையின் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் நன்மைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பைனஸ் மற்றும் யூக்கலிப்டஸ் தாவரங்களுக்கு பதிலாக உள்நாட்டு தாவரங்களை பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தாவர வகைகள் யாவையென்பதையும்;

(iii) இன்றேல், எதிர்வரும் காலத்தில் உள்நாட்டு தாவரங்களை பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) அது தொடர்பாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

459/ '16

2.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு 06, கிருலப்பனை, மிஹிந்துபுர மத்திய வர்க்கத் தினருக்கான வீடமைப்புத் திட்டத்தின் தற்போதைய நிலை யாதென்பதையும்;

(ii) மேற்படி வீடமைப்புத் திட்டம் நிறைவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) நிர்மாணிப்புகள் நிறைவு செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இதற்காக தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணிப்புகளுக்கு பொறுப்பாக செயற்பட்ட உள்நாட்டு நிறுவனம் சுமார் இரண்டு ஏக்கர்களான மேற்படி அரச காணியை தமது தனிப்பட்ட கனரக வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக பயன்படுத்துகின்றதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி காணியை பயன்படுத்துவதற்காக அந் நிறுவனம் அரசாங்கத்துக்கு செலுத்தும் மாதாந்த குத்தகைத் தொகை எவ்வளவு;

(iii) குத்தகைத் தொகையை செலுத்தாது காணி பயன்படுத்தப்படுமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

660/ '16

3.

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாகாண சபைகளின் கீழ் இயங்கிவருகின்ற பாடசாலைகளின் ஒருசில அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவமாணவிகள் பல்வேறு அநீதிகளுக்கும் உடல் மற்றும் உளரீதியான சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இன்றளவில் அவ்விதமாக உள மற்றும் உடல்ரீதியான துன்புறுத்தல்களுக்கு இலக்காகிய மாணவமாணவிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்திற்கு ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு;

(ii) உள மற்றும் உடல்ரீதியான துன்புறுத்தல்களைத் தடுக்கவும் அவர்களின் ஒழுக்கம் நிறைந்த நடத்தைகள் பற்றியும் மாகாண முதலமைச்சருக்கு விழிப்புணர்வூட்டி அவருடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

673/ ' 16

4.

கௌரவ பிமல் ரத்னாயக்க,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தினால் அகதி முகாம்கள் பேணிவரப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், இம்முகாம்கள் அமைந்துள்ள இடங்கள், அவற்றில் உள்ள ஆட்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) இம்முகாம்களில் உள்ள மக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை ஒவ்வொரு முகாமின் படி வெவ்வேறாக எவ்வளவு;

(iv) ஒரு நபருக்கு மற்றும் ஒரு குடும்பத்துக்கு ஒரு மாதத்துக்கு வழங்கப்படும் நிவாரணம் வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அகதிகளுக்குச் சொந்தமான காணிகள் அல்லது வீடுகளின் ஆட்சியை, அரசு அல்லது தனியார் நிறுவனங்கள் அல்லது வேறு நபர்கள் அனுபவிப்பார்களாயின், அத்தகவல்கள் மற்றும் இக் காணிகள் / வீடுகள் சொந்தமாகவுள்ள அகதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) இவ்வகதிகளில் குடியிருப்பதற்கு காணியோ அல்லது வீடோ இல்லாத நபர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு முகாமின் படி வெவ்வேறாக எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

703/ '16

5.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச ஊழியர்கள் ஓய்வு பெறுகின்ற வயது 55 ஆக இருக்கையில் இராணுவ நடவடிக்கையின்போது மரணமடைந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும் மாதாந்த சம்பளத்தை மரணமடைந்த இராணுவ வீரருக்கு 55 வயது பூர்த்தியாகும் வரை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்ததென்பதையும்;

(ii) அரச ஊழியர்களுக்கு 58 வயது வரை தன்னியக்கமாகவும், 58 வயது தொடக்கம் 60 வயது வரை முன்அனுமதி பெற்றும், ஓய்வு பெறும் வயது 60 வரை உயர்த்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மரணமடைந்த இராணுவ வீரர்களின் குடும்பங்ளுக்கு இன்னமுமே மாதாந்த சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படுவது இராணுவ வீரருக்கு 55 வயது பூர்த்தியாகும் வரை மாத்திரமே என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) (i) மரணமடைந்த இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு இராணுவ வீரரின் மாதாந்த சம்பளத்தை அவருக்கு 60 வயது பூர்த்தியாகும் வரை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி வயதுத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுவது எத்திகதி தொடக்கம் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

718/ ' 16

6.

கௌரவ இஷாக் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் மாவட்டத்தில்,

(i) அமைந்துள்ள ஒரேயொரு தமிழ் மொழிமூல தேசிய பாடசாலையான அ/ சாஹிரா வித்தியாலயம் கவனிப்பாரற்ற நிலைக்குள்ளாகியமையால் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றதென்பதையும்;

(ii) "1000 பாடசாலைகள்" வேலைத்திட்டத்தில் காடாண்டுகம, ஜாயா முஸ்லிம் மஹா வித்தியாலயம் மற்றும் கஹட்டகஸ்திகிலிய முஸ்லிம் மஹா வித்தியாலயம் உள்ளடக்கப்பட்டுள்ளபோதிலும் தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடம் தவிர்ந்த வேறு எவ்விதமான வசதிகளும் இன்றளவில் வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்பவியல் போன்ற பாடங்களைப் போதிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேலே அ (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலையில்,

(i) உயர்தர விஞ்ஞானப் பிரிவில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுகின்ற;

(ii) புதிய கட்டடமொன்று வழங்கப்படுகின்ற;

(iii) அதிபருக்கான அலுவலகமும் கேட்போர் கூடமொன்றும் வழங்கப்படுகின்ற;

(iv) குடிநீர் சுத்திகரிப்பு கருவியொன்று வழங்கப்படுகின்ற;

திகதி யாதென்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே அ (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அவசியமான ஏனைய வசதிகள் வழங்கப்படுகின்ற;

(ii) மேலே அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்ற;

திகதி யாதென்பதையும் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

722/ ’16

7.

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த மே மாதத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் காரணமாக சேதத்துக்குள்ளான பயிர்ச் செய்கைகளுடன்கூடிய வயற்காணிகளின் பரப்பளவு எத்தனை ஹெக்டயார்கள் என்பதையும்;

(ii) மேற்படி சேதத்தினால் ஏற்பட்டுள்ள நஷ்டம் அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

(iii) சிறு குளங்கள் உட்பட சேதமடைந்துள்ள நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள நீர்ப்பாசன கருத்திட்டங்கள் அமைந்துள்ள மாவட்டங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எதிர்காலத்தில் நாட்டின் உணவுப் பாதுகாப்பில் மேற்படி வெள்ளப் பாதிப்பு தாக்கங்களை ஏற்படுத்துமா என்பதையும்;

(ii) பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

727/ ’16

8.

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டில் பகுதிகளை சேர்த்திணைத்து அமைக்கப்பட்ட ஆயினும், பதிவுசெய்யப்படாத வாகனங்களை பதிவு செய்வதற்கான விசேட அனுமதி 2016 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ii) 2016 மார்ச்சு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவ்வாகனங்களை பதிவுசெய்துள்ள ஆட்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) ரூபா ஒரு மில்லியன் செலுத்தி பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் இவ்வாகனங்களை பதிவு செய்துள்ளவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

383/ '15

9.

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தென் மாகாணத்துக்கான குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது பணியாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இறுதியாக குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பயிற்சியை பூர்த்தி செய்திருந்தும் இற்றைவரை ஆட்சேர்க்கப்படாதுள்ள குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் உள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தென் மாகாணத்தில் அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் சொந்தமான பொது வைத்தியசாலைகளில் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ii) ஆமெனில், மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

674/ ' 16

10.

கௌரவ பிமல் ரத்னாயக்க,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு ,— (1)

(அ) (i) அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் கம்பனிகளின் தலைவர்கள் ஆகியோருக்காக கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) ஒவ்வொரு நிறுவனத்துக்கும் சொந்தமான உத்தியோகபூர்வ விடுதிகள் வெவ்வேறாக யாவை;

(iii) இவ்வுத்தியோகபூர்வ விடுதிகளை தற்போது உபயோகிக்கும் ஆட்களின் பெயர்ப்பட்டியலை சமர்ப்பிப்பாரா;

(iv) இவ்வுத்தியோகபூர்வ விடுதிகளை ஒதுக்குவதற்காக கடைப்பிடிக்கப்படும் ஒழுங்குவிதிகள் அடங்கிய சுற்று நிருபமோ ஆவணமோ காணப்படுகின்றதா;

(v) ஆமெனில் அதை சபையில் சமர்ப்பிப்பாரா;

(vi) ஒழுங்குவிதிகளடங்கிய ஆவணம் ஏதுமின்றேல், இவ்விடுதிகள் ஒதுக்கப்படும் நடைமுறை யாது;

(vii) விடுதிகள் ஒதுக்கப்படும் ஒழுங்குவிதிகள் அல்லது நடைமுறையின்படி தகைமைபெறாது விடுதிகளில் தங்கியிருப்போரின் எண்ணிக்கை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

704/ ’16

11.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஏப்ரல் மாதம் தொடக்கம் தேசிய கொள்கைள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளியிடப்படும், கடன் நெருக்கடி பற்றிய விளம்பரங்களுக்கென செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகளின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு பத்திரிகையிலும் விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஆகியன தனித்தனியே யாதென்பதையும்;

(iii) இவ்விளம்பரங்களை ஒளி/ஒலி பரப்புவதற்காக தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளுக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி விளம்பரங்களுக்கு நிதி பெறப்பட்ட விதம் யாதென்பதையும்;

(v) மேற்படி விளம்பரங்களுக்கான நிதி அரசாங்க பணத்தை பயன்படுத்தி பெறப்பட்டிருப்பின், இதற்கான நிதி பெறப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்;

(vi) இவ்விளம்பரங்களுக்கான நிதி பெறப்பட்டது அரசசார் மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் அனுசரணையில் எனின், இந்நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு நிறுவனமும் பெற்றுக்கொடுத்த பணத் தொகை தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

719/ ’16

12.

கௌரவ இஷாக் ரஹுமான் ,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் பெரும் பிரச்சினையாக காணப்படுகின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் பாரிய அளவிலான நீர் வழங்கும் திட்டங்களைச் செயற்படுத்திய போதிலும் அவற்றினால் போதியளவு பயன் கிடைக்கவில்லை என்பதையும்;

(ii) இம்மாவட்டத்தில் 25,000 க்கும் மேற்பட்டவர்கள் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதுடன் இவர்களில் 11,000 பேர் மரணத்தை அண்மிய நிலையில் தமது வாழ்க்கையைக் கழித்து வருகின்றனர் என்பதையும்;

(iii) குடி நீரில் கட்மியம் போன்ற இரசாயனப் பொருட்கள் கலந்துள்ளமையால் இவ்வாறான நோய் நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதையும்;

(iv) சிறு நீரக நோயைத் தடுக்கும் நோக்கத்துடன் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள நீர் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் போதியதாக இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) குடி நீர் பிரச்சினை நிலவும் பிரதேசங்களுக்கு குடி நீர் வழங்குவதற்கான புதிய நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பாரா;

(ii) ஆமெனில், அது எத்திகதியில்;

(iii) நோயாளிகள் பரவலாக வாழும் பிரதேசங்களுக்கு நீர் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

723/ ’16

13.

கௌரவ ரி. ரஞ்ஜித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தற்போதைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொதுப்படுகடன் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மொத்த பொதுப்படுகடன் தொகை தேசிய வருமானத்தின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி சதவீதம் 2004 ஆம் ஆண்டில் இருந்த பொதுப்படுகடன் தொகையின் சதவீதத்தையும் விட குறைவானதா அல்லது அதிகமானதா என்பதையும்;

(iv) அக்கடனைச் செலுத்தித் தீர்ப்பதற்கு அரசு பிரேரிக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அண்மைக் காலம் முதல் மேற்படி கடன் தொகை சம்பந்தமாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் இந்நாட்டு அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக விளம்பரம் செய்வதற்கு எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அறிவித்தல்களை பிரச்சாரம் செய்வதற்கு அரச மற்றும் தனியார் தொலைக்காட்சி ஊடகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) அரச மற்றும் தனியார் வானொலி ஊடகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) தினசரி மற்றும் வாராந்த பத்திரிகைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

728/ ’16

14.

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1995 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இலங்கை அரசாங்கத்தினால் அறவிடப்படுகின்ற நேரடி வரி வகைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வரி வகையும் அறவிடப்படும் அடிப்படை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) 1995 முதல் 2015 வரை நேரடி வரி மூலம் அரச வருமானத்துக்கு செய்யப்பட்ட பங்களிப்பு (ரூபா) ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பங்களிப்பு அரசாங்கத்தின் மொத்த வருமானத்தினதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியினதும் சதவீதமாக, ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் நேரடி வரி வருமானம் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) 2015 ஆம் ஆண்டில் சார்க் பிராந்திய நாடுகளுக்கு ஒப்பீட்டளவில், இலங்கையின் நேரடி வரி வருமானத்தின் போக்கு எத்தகையதென்பதையும்;

(vii) இலங்கையின் நேரடி வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு அறிமுகப்படுத்தப் படவுள்ள சிறப்பு நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

775/ '16

15.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முப்படைகளைச் சார்ந்த சுமார் 1235 குடும்பங்கள் நிரந்தரமாக வதியும் அநுராதபுரம் மாவட்டத்தின் இபலோகம, ரணஜயபுர கிராமத்தின் ஆரம்ப சுகாதாரப் பேணுகை பிரிவுக்கு அரச மருத்துவ உத்தியோகத்தரொருவர் கடமையில் ஈடுபடுத்தப்படவில்லையென்பதையும்;

(ii) அரச மருத்துவரொருவர் நிரந்தரமாக கடமையில் ஈடுபடுத்தப்படாததால் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படையைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர்கள் அவ்வப்போது இப்பிரிவில் பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கிராமத்தின் ஆரம்ப சுகாதாரப் பேணுகை பிரிவிற்கு நிரந்த மருத்துவ உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## அனுதாபப் பிரேரணை

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்தன.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறாக, 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் (அத்தியாயம் 131) 39 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2016.07.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2016 யூன் 22 ஆந் திகதிய 1972/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை மூலம் சிங்கள மற்றும் தமிழ்மொழி பிரதிகளில் அச்சுப் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட, மோட்டார் வாகனச் சட்டத்தின் (203 ஆவது அத்தியாயமான) 122 ஆம் பிரிவு மற்றும் VII அ பகுதியுடன் சேர்த்து வாசிக்கப்படும், குறித்த சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச்சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 நவெம்பர் 02 ஆம் திகதிய 1939/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் இணைக்கப்பட்டுள்ளது)

* 3.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஈ பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 22 ஆந் திகதிய 1946/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2016.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

சட்ட ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவீனத் தலைப்பு 147, நிகழ்ச்சித்திட்டம் 01,— † செயற்பாட்டு நடவடிக்கைகள் 2016 ஜனவரி 01 ஆம் திகதியுடன் ஆரம்பித்து 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதி ஆண்டின் பயன்பாட்டுக்காக இலங்கையின் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் ஏற்கனவே அங்கீகரித்துள்ள செலவின எல்லைகளை விஞ்சாத வகையில் அதன் பலதரப்பட்ட செலவீன தலைப்புக்களின் கீழ் எதிர்பார்த்த சேமிப்புக்களை தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் செலவீனத் தலைப்பு ''வரவுசெலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் அவசர நிலைமைகள் செயற்திட்டத்திற்கு'' மாற்றிக் கொள்வதற்கும் 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க வரவுசெலவுதிட்ட வகுத்திட்டுச் சட்டத்தின் 6.1 மற்றும் 6.2 ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு இனங்காணப்பட்ட வெளிநாட்டு நிதியளிப்புடன் செயற்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களை துரிதப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி குறைநிரப்பு நிதி ஏற்பாடாக உரிய அமைச்சுக்களுக்கு மாற்றுவதற்கு இயலும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசுக்குச் சொந்தமான வேறு ஏதேனுமொரு நிதியத்திலிருந்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பின் பிரகாரம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தினால் நிதியளிப்பு செய்யப்பட்ட ரூபா ஐம்பத்தொன்பது கோடி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரங்கள் (ரூ. 592,925,000) தொகையினை விஞ்சாத தொகையொன்றை அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டுமென பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்துள்ளார்.

**அட்டவணை**

தலைப்பு:- 147 - பிரதேச அபிவிருத்தி அமைச்சு

நிகழ்ச்சித்திட்டம்:- 1 - செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

| | | |
|---|---|---|
| மீண்டெழும் செலவீனம் | - | ரூ. 469,425,000 |
| மூலதனச் செலவீனம் | - | ரூ. 123,500,000 |
| மொத்தச் செலவீனம் | - | ரூ. 592,925,000 |

(ரூபா ஐம்பத்தொன்பது கோடி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரங்கள் மாத்திரம்)

**அரச அலுவலர்களுக்கான முற்பண "பீ" கணக்கு**

| | |
|---|---|
| உச்ச செலவீன எல்லை ( உச்ச வரவு எல்லை) | – ரூ 2,000,000 |
| குறைந்த கிடைப்பனவு எல்லை (குறைந்த செலவு எல்லை) | - ரூ. 150,000 |
| உச்ச வரவு நிலுவை எல்லை | - ரூ. 3,500,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2016 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 55,000,000.

* 9.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைத்தல்,— 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (1) ஆவது உறுப்புரையின் பிரகாரம், ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு அந்த ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கும், அப்பதவியை வகிப்பவருக்கு பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சம்பளத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும்;

ஆபத்தை ஏற்க வேண்டிய பதவியான இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 2015.02.12 ஆம் திகதி அரசாங்கத்தின் தேவையின் அடிப்படையில் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவியை வகித்த சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவை நியமனம் செய்ததன் அடிப்படையில், அவருக்கு தனிப்பட்ட வகையில் அமையுமாறு கீழ் குறிப்பிடப்படும் சம்பளம் மற்றும் படிகளை 2015.02.12 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாலும்;

அ. மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவிக்குரித்தான மாதாந்தச் சம்பளம் மற்றும் சகல கொடுப்பனவுகள் (தொலைபேசி கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் வீட்டு வாடகைக் கொடுப்பனவு தவிர்ந்த); அத்துடன்

ஆ. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்குரித்தான அமைச்சின் செயலாளருக்கான கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்படவில்லையாயின் வீட்டு வாடகைக் கொடுப்பனவு.

அதற்கமைவாக, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (2) ஆவது உறுப்புரையின் பிரகாரம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவிற்கு அரச திரட்டு நிதியத்திலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகள்,— பத்தொன்பதாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 41 (ஆ) உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் எனைய கொடுப்பனவுகளை, குறிப்பிட்ட ஆணைக் குழுக்கள் உண்மையிலேயே அலுவல்களை ஆரம்பித்த திகதியினை மேற்குறிப்பிடப்பட்ட செலுத்துகைகள் அமுலாக்கப்படும் திகதியாகக் கருதி செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாலும்:-

(அ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் தலைவர்கள் தவிர ஏனைய தலைவர்களுக்கு ரூபா. 100,000/- மாதாந்தக் கொடுப்பனவவையும், ரூபா.10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கு உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 225 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஆ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் சுயாதீன ஆணைக்குழுத் தலைவர்களுக்கு தமது நிரந்தரப் பதவிக்குரிய சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக, சுயாதீன ஆணைக்குழுத் தலைவர் ஒருவரின் மாதாந்தக் கொடுப்பனவின் 50% ஐ மாதாந்தக் கொடுப்பனவாகச் செலுத்துவதற்காகவும்;

(இ) இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழு தவிர ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்குப் பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படாத உறுப்பினர்களுக்கு ரூபா 75,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தான் வசிக்கும் இடத்திலிருந்து ஆணைக்குழு அலுவலகத்திற்குச் செல்வதற்கான தூரத்தின் அடிப்படையில் 350 கிலோ மீட்டர்கள் வரை ரூபா 25,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது 350 கிலோ மீட்டர்களிலும் அதிகளவு தூரத்திற்கு ரூபா 50,000/- போக்குவரத்துக் கொடுப்பனவையும் செலுத்துவதற்காகவும்;

(ஈ) 2015.06.17 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க வர்த்தக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவருக்கு ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ரூபா 10,000/- கொடுப்பனவைச் செலுத்துவதற்காகவும்;

(உ) 1994 இன் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் (8) ஆம் உறுப்புரைக்கமைய அந்த ஆணைக்குழுவின் தலைவருக்கு இணையான வகையில் உறுப்பினர்களுக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு ரூபா 95,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கும் உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 170 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஊ) தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு தேர்தல் ஒன்றுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதி முதல் பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதி வரையிலான காலப் பகுதிக்காக அவர்களது மாதாந்தக் கொடுப்பனவின் ¾ விசேட கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்; மற்றும்

அதற்கமைய, அரசியல் யாப்பின் 41 (அ) சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஊதியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்தவேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் இணைக்கப்பட்டுள்ளது)

* 11.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 12.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.